# எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டம் 2015

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டம் 2015 |
| செயற்றிட்ட எண் | NF/PG/2015/0001 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | தை 2015 - மார்கழி 2015 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குதாரர்கள் | நூலக நிறுவனம், பதிப்பகங்கள், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| பாதீடு (Budget) | |

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாக திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. 2014 இறுதி வரை நூலக நிறுவனம் 15,000 எழுத்தாவணங்களை எண்ணிம வடிவங்களில் சேகரித்து இணையத்துக்குக் கொண்டுவந்துள்ளது. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியன உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு ஆண்டுவாரியாகவும், பதிப்பகங்கள் வாரியாகவும் எழுத்தாளர்கள் வாரியாகவும் பொருட்தலைப்பு வாரியாகவும் இலகுவில் கிடைக்கக்கூடிய வகையில் நூலக வலைத்தளத்தில் பகுப்பாக்கம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பல்வேறு வலைவாசல்கள் ஊடாகவும் சிறப்புச் சேகரங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்டச் சுருக்கம்

எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டமானது ஆண்டு தோறும் நூலக நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டமாகும். எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள் நூலகத்துக்கு அன்பளிப்பாகவும் இரவலாகவும் வழங்கும் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல், நூலக நிறுவனச் செயற்றிட்டங்கள் ஊடாகக் கிடைக்கப்பெறும் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல், நூலகச் சேகரிப்பில் விடுபட்ட ஆவணங்களையும் புதிதாக இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களையும் இனங்கண்டு அவற்றை எண்ணிமப்படுத்தல், நூலக நிறுவனச்

செயற்பாடுகளில் கிடைக்கும் பல்லூடக ஆவணங்களை இணைத்தல் போன்ற செயற்பாடுகள் இச்செயற்றிட்டம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் இச்செயற்றிட்டம் மூலம் 2015இல் 1,000 ஆவணங்கள் நூலக வலைத்தளத்தில் இணைக்கப்பட்டன.

## இலக்குகளும் நோக்கங்களும்

நூலக நிறுவனத்தின் எண்ணிம சேகரிப்பைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதும் பலப்படுத்துவதும் இச்செயற்றிட்டத்தின் பிரதானமான நோக்கமாகும் எண்ணிமச் சேகரிப்புக்கள் தம்மளவில் முழுமையாக இருந்தால் மட்டுமே அவற்றின் மூலம் ஈழத்துத் தமிழ் பேசும் சமூகங்கள் கல்வி, ஆராய்ச்சி, சமூக மேம்பாட்டு முயற்சிகளுக்குப் போதிய பயனைப் பெற முடியும். மேலும் அதிகம் பதிவு செய்யப்படாத குரல்களையும் விளிம்புநிலைச் சமூகங்களையும் குறிப்பாக அதிக கவனம் செலுத்தி ஆவணப்படுத்துவதும் இச்செயற்றிடத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது.

## செயற்பாட்டு முறைமை

இச்செயற்றிட்டமானது பிரதானமான பின்வரும் படிமுறைகளைக் கொண்டுள்ளது.

1. **ஆவணங்களைச் சேகரித்தல்:** ஆய்வாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், ஆளுமைகளிடமிருந்தும் நூலகங்கள் உள்ளிட்ட சமூக நிறுவனங்களிடமிருந்தும் ஆவணங்கள் சேகரிக்கப்படுகின்றன்.
2. **ஆவணங்களை எண்ணிமப்படுத்தத் தயார் செய்தல்:** ஆவணங்கள் முழுமையாக உள்ளனவா, பதிப்புரிமை அனுமதி உள்ளதா, ஏற்கனவே குறித்த ஆவணம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதா போன்றவை சோதிக்கப்பட்டு எண்ணிப் படுத்த அனுப்பபடுகின்றன.
3. **எண்ணிமப்படுத்தல்:** ஆவணங்களுக்குப் பொருத்தமான கருவிகளைப் பயன்படுத்தி நூலக நிறுவனத்தால் சர்வதேச நியமங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட தரத்தில் எண்ணிமப்படுத்தல்
4. **அணுக்கப்படுத்தல்:** எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களைச் சரிபார்த்து உரிய விபரத் தரவுகளுடன் இணையத்தில் கிடைக்கச் செய்தல்
5. நிறைவுசெய்தல்: எண்ணிமப்படுத்த ஆவணங்களைப் பிரதியெடுத்துக் காப்புப்படிகளை உருவாக்குதலும் மூல ஆவணங்களை உரிமையாளர்களிடம் மீள வழங்குதல் அல்லது சேமித்தல்.

## அடைவுகள்

ஆவணங்களின் எண்ணிக்கைகள்

| ஆவண வகை | 2014 இறுதி | 2015 அடைவுகள் | 2015 இறுதி |
|---|---|---|---|
| நூல்கள் | 4,747 | 372 | 5,119 |
| இதழ்கள் | 6,385 | 254 | 6,639 |
| பத்திரிகைகள் | 2,122 | 361 | 2,483 |
| பிறஆவணங்கள் | 1,746 | 13 | 1,759 |

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 15,000 | 1,000 | 16,000 |

**எதிர்கொண்ட சவால்கள்**

- நூலக நிறுவனச் செயற்பாடுகளை நிறுவனமாக ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளில் பெருமளவு வளங்கள் பயன்படுத்தப்பட்டதால் சேகர அபிவிருத்திக்குப் போதிய வளங்கள் ஒதுக்கப்படவில்லை.
- கிடைக்கப்பெற்ற ஆவணங்கள் பலவற்றுக்கு உரிய பதிப்புரிமையாளரின் அனுமதிகள் கிடைக்கப் பெறாமையால் அவற்றை மின்வருட முடியவில்லை.
- அரிய ஆவணங்கள் பல தனிப்பட்ட சேகரிப்பாளர்களிடம் இருப்பதை அறிய முடிந்தபோதும் அவற்றை ஆவணப்படுத்தப் போதிய ஆளணி இருக்கவில்லை.
- நிறுவனச் செயற்பாடுகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமாகப் பிரிந்து காணப்படுகின்றன. மின்வருடற் பணிகள் யாழ்ப்பாணத்திலும் மின்வருடலுக்குப் பின்னரான பணிகள் கொழும்பிலுமாக உள்ளமையால் உடனடியாக ஆவணங்களை இணையத்துக்குக் கொண்டு வருவதில் சிக்கல்கள் எதிர்நோக்கப்பட்டது.

**கற்றல்களும் பரிந்துரைகளும்**

- மின்வருடற் பணிகளை வினைத்திறனுடன் முன்னெடுக்க மேலதிக ஆளணி வளங்கள் தேவை.
- சமூகத்தில் சிதறிக் காணப்படும் ஆவணங்களைச் சேகரிக்கக் களப்பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
- நூலக நிறுவனச் செயற்பாடுகள் பல்வேறு மாவட்டங்கள், அலுவலகங்களில் இருந்து செயற்படுத்தப்படுவது அவசியம் என்றபோதும் செயற்பாடுகளின் இறுதிப்பணிகள் யாவும் ஓரிடத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.